## தலைப்பு 9 – நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு

---

தலைப்பு 9 - நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 மே 16 ஆந் திகதி நியாயசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

நியாயசபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 23.05 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 21.86 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நியாயசபைக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1.19 மில்லியன் அதாவது 5.16 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 22.20 | 21.19 | 1.01 | 4.55 |
| மூலதனம் | 0.85 | 0.67 | 0.18 | 21.18 |
| மொத்தம் | **23.05** | **21.86** | **1.19** | **5.16** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

நியாயசபைக்குரிய 00901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 1.00 | 0.97 | 0.30 | 0.86 | 2.50 | 1.47 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

நியாயசபையினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன், 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.2.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்குரிய அறிக்கைகள் மற்றும் உத்தியோகத்தர்களைக் அழைக்கும் போது நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் அந்த அறிக்கைகள் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்வராத சந்தர்ப்பங்கள் இருந்ததுடன் விசாரணை செய்யப்படுகின்ற மேன்முறையீடு தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பாக உரிய ஆணைக்குழுக்கள் அறிவூட்டப்பட்டிருந்த போதிலும் அத்தீர்மானங்கள் செயற்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டன. அதனால் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றிருந்த 500 இற்கும் மேற்பட்ட மேன்முறையீடுகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பொருத்தமான நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த 243 முறைப்பாடுகளில் 10 மாத்திரம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் 233 முறைப்பாடுகளுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 யூன் 01 ஆந் திகதி முதல் 03 வருட நீண்ட காலப்பகுதிக்காக மாதமொன்றிற்கு ரூபா 600,000 வாடகைக்கு நியாயசபையின் நடவடிக்கைகளுக்காக கட்டிடமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கான அரச மதிப்பீடு வாடகை 2015 மே 05 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. நியாயசபையின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவது அவசர செயற்பாடொன்றாக கருதி அரச விலை மதிப்பாளரின் மதிப்பீட்டு வாடகையை அடிப்படையாக கொள்வதற்கு இயலுமான வகையில் கட்டிடத்தின் வாடகைக்கு எடுப்பதற்கு 2015 மே 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சனாதிபதி செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2016 சனவரி 12 ஆந் திகதி அரச விலை மதிப்பாளரால் அதன் மாதாந்த வாடகை ரூபா 350,000 என அறிவிக்கப்பட்டிருந்தது. சனாதிபதி செயலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 3 ஆண்டுகள் போன்ற நீண்டகாலப்பகுதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையால் மாதமொன்றுக்கு ரூபா 250,000 வீதம் சிக்கனமற்ற வாடகை செலுத்த நேர்ந்திருந்தது.

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| (ii) | இரண்டாம் நிலை | 22 | 11 | 11 |
| (iii) | ஆரம்ப நிலை | 08 | 06 | 02 |
| | மொத்தம் | 32 | 19 | 13 |

**பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.**

மீளாய்வாண்டின் போது 13 வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 02 சிரேஷ்ட நிலை பதவிகள், 04 இரண்டாம் தர பதவிகள் மற்றும் 02 ஆரம்ப நிலை பதவிகளுக்காக 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் முதல் ஒப்பந்த அடிப்படையிலும் ஆரம்ப நிலை பதவியொன்றுக்காக அமைய அடிப்படையிலுமாக 09 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.